முருகப்பெருமான் துணை

**மகான் கலிகம்ப நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.07.2022, ஞாயிற்றுக்கிழமை

1. சத்திய தர்ம உலகம் படைக்க
சற்குருவாய் வந்த அரங்கனே
உத்தமமாய் உன்மார்க்கம் ஏற்க
உலகமே பாதுகாப்பு பெறும் எனக்கூறி
2. கூறியே அருளாசி தன்னை
குறைவில்லா சுபகிருது நள்ளி திங்கள்
தெரிவிப்பேன் முதல் திகதி கதிரோன் வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் முதல் நாள், 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை)
தேசிகனுக்கு கலிக்கம்ப நாயனார் யானும்
3. யானுமே உலக நலம்பெற உரைப்பேன்
உண்மைபட மக்களை காத்தருள
ஞானமாக அரங்கன் திருகின்ற
நம்பிக்கை தரும் சன்மார்க்க வழிகள் தன்னை
4. தன்னையே உலகோர் வேதமாக
தன்னை காக்கும் தவமாக ஏற்று
அண்ணல் அரங்கன் திருவடி பற்றி
அன்னதான சேவையில் பொருளுதவி செய்து
5. செய்துமே உலக மக்கள் அனைவரும்
சேவைதனை சத்திய கடமையாக
ஐயமற தொடர்ந்து வருதலுற
அனைவருக்கும் ஆறுமுகனார் ஆசி கிட்டி
6. கிட்டியே ஞானவான்கள் எனும் அடையாளம்
குறைவிலா உலகோர் அடைதல் கண்டு
கட்டமில்லா பெருவாழ்வு காண்பர்
கலியிடரை வெல்லும் சக்தி பெறுவர்
7. சக்திமிகு சன்மார்க்க அன்பர்களாகி
சரவணஜோதி வழிபாட்டை பெருக்கி
பக்தியோடு சித்திமார்க்கம் கூட்டியே
பணிந்து உலகோர் அரங்கஞானி வசம்வர
8. வருகவே நிலைமைகள் யாவும் மாறும்
வந்தடையும் அமைதி பாதுகாப்பும் கூடி
பெருமைமிக்க ஞான பூமியாகும்
பேராசான் வழிநடத்தும் ஞானவான்கள் படை
9. படைகள் மிகுந்து சிறந்து
பக்குவம் தரும் சக்திமிக்கவர்களாக வளர்ந்து
சோடைகளை வெல்லும் நிலைகள் கூடி
சுத்தநெறி கொண்ட ஞானஆட்சி உருவாகும்

10. உருவாகி மக்களை தேற்றுகின்ற
உயர்வான அரங்கன் வழிகாட்டலே
திருவருளாகி உலகமெங்கும் நிரம்பி
தெய்வ ஞான ஆட்சிகாலமாக மாறும்

11. மாறுதலை தரும் ஒரே ஞானி அரங்கனே
மகத்துவம் தரும் சிறந்த ஞானி தேசிகனே
ஆறுமுகா அரங்கா என தேடிவர
அனைவருக்கும் ஞான சித்தி உறுதியாகும்
அருளாசி முற்றே

–சுபம்–